10.03.2025

O.S.No.253/2022

வா.சா.1.திரு. வருண், த.பெ. இராஜேந்திரன்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு** விசாரணை தொடர்ச்சி

1. அசல் ஆவணம் காணாமல் போனதாக காவல் நிலையத்தில் 1ம் பிரதிவாதி புகார் கொடுத்ததாக எனது கிரைய ஆவணத்தில், அந்த புகாரை ஒரு ஆவணமாக இணைத்துள்ளதால் அந்த புகாரின் பேரில் விசாரணை நடத்தி காவல் நிலையத்தில் Non Traceable சான்றிதழ் கொடுத்தார்களா என்றால் எனக்கு தெரியாது. காவல் நிலையத்தில் ஆவணம் காணாமல் போனது பற்றி புகார் கொடுத்திருந்தால் அவர்கள் விசாரணை செய்து Non Traceable சான்றிதழ் கொடுத்த பின்பு தான் பத்திர அலுவலகத்தில் பத்திரம் பதிய முடியும் என்றால் சரிதான். பத்திர அலுவலகத்தில் இது சம்பந்தமாக விசாரணை நடத்தியபோது, 1ம் வாதி அந்த அசல் ஆவணம் அவரிடம் இருப்பதாக சொல்லிவிட்டார். நான் 1ம் பிரதிவாதியிடம் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் தேதி 30.04.2021 என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி, மதுரை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.80/2011- என்ற வழக்கு 25.03.2022ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி ஜெகதீஸ்வரி அசல் வழக்கு எண்.80/2011- என்ற வழக்கை வாபஸ் பெறுவதாக இந்த 1ம் வாதிக்கு 09.07.2021ம் தேதியன்று நீதிமன்றத்தில் Not press memo தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

2. பி.வா.சா.ஆ.1- ஆவணம், 1ம் பிரதிவாதி அவரது மகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாக சொல்லப்படும் ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணம் 09.07.2021ம் தேதி மதியம் 02.17 மணிக்கு பதிவு செய்யப்பட்டதாக காணப்படுகிறது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணமும், வா.சா.ஆ.7 Not press memo-வும் ஒரே நாளில் ஏற்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தவரை அசல் வழக்கு எண்.80/2011-ல் எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கில் உள்ள சொத்து இந்த வழக்கில் கட்டுப்படவில்லை. பி.வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்தில் RDO பிறப்பித்த வா.சா.ஆ.3 உத்தரவைப்பற்றி எதுவும் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3. 1ம் பிரதிவாதி எனக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் செல்லாது என கோரி மாவட்ட பதிவாளரிடம் 1ம் வாதி திருமேனி புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். அதில் நானும், 1ம் பிரதிவாதியும் ஆஜராகி எங்கள் தரப்பு எழுத்துப் பூர்வமான வாதத்தை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.15-தான் அதில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு என்றால்

சரிதான். வா.சா.ஆ.15 உத்தரவில், 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியும் உடன் பிறந்தவர்கள் என்றும், அவர்களுக்கிடையே உள்ள ஈகோ பிரச்சனையில், நான் தவறுதலாக கிரையம் பெற்றுவிட்டேன் என்றும், அவர்களுக்கிடையே உள்ள பிரச்சனையில் என்னை சிக்கவைத்துவிடாமல் என்னை காக்க வேண்டுமென நான் பதிலாக அந்த வழக்கில் கூறியதாக காணப்படுகிறது என்றால் சரிதான்.

4. அதேபோல், மேற்படி உத்தரவில் எனது கிரைய ஆவணத்தில் தாய் பத்திரத்தின் எண் தவறுதலாக குறிப்பிட்டப்பட்டுள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு வா.சா.ஆ.15 ஆவணத்தில் காணப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி உத்தரவை எதிர்த்து 1ம் வாதி, பதிவு துறை துணைத் தலைவரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு சார்பாக அசோகன் என்ற வழக்கறிஞர் ஆஜரானர் என்றால் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு சார்பாக அசோகன் என்ற வழக்கறிஞர் தான் ஆஜராகி வழக்கு நடத்தி வருகிறார் என்றாலும், அதை தெரிந்து கொண்டே தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5. அந்த வழக்கில் 1ம் பிரதிவாதி ஆஜராகாமல் ஒரு தலைபட்ச உத்தரவு பிறக்கிப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 பதிவு செய்யப்பட்ட தேதி 24.02.2023 என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட ஒரு வருடம் கழித்து இவ்வழக்கில் ஆஜராகாத 1ம் பிரதிவாதியும், நானும் சேர்ந்து உண்மைக்கு புறம்பான சங்கதிகளை கூறி பதிவு செய்யப்பட்ட ஆவணம் பி.வா.சா.ஆ.7 என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்திற்குரிய அசல் கிரையப் பத்திரம் 1ம் வாதி வசம் உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் வழக்கடை சொத்திற்கான சர்வே நம்பர் இல்லை. மீண்டும் என்னிடம் காட்டப்படும் மற்றோரு ஆவணத்தில் வழக்கிடை சொத்து குறிப்பிடப்பட்டுள்ளது. அசல் வழக்கு எண்.80/2011 பிராதுடன் சேர்த்து தாக்கல் செய்யப்பட்ட A ரிஜிஸ்டர் சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் என்றால் சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வழக்கிடை சொத்தில் எனக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் 1ம் பிரதிவாதிக்கு பாகப் பாத்திய உரிமை உள்ளதா என்பதற்கான நீதிமன்ற உத்தரவோ, ஆவணமோ உள்ளதா என்பதை பார்த்து தெரிந்துகொண்டேன் என்றால் அவர்கள் பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை. வழக்கிடை சொத்தில் பாகப்பாத்திய உரிமை இல்லை என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.1 நடைமுறையில் உள்ளதால் 1ம் பிரதிவாதிக்கு வழக்கிடைச் சொத்திலோ, வேறு குடும்ப சொத்துக்களிலோ எவ்வித பாகப் பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியும், நானும் வெவ்வேறு சமுகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு வழக்கிடை

சொத்தில் பிரிவினை இல்லாத 1/3 பாகத்தை கிரையம் பெற்றிருப்பதாக கூறுவதால் எனக்கு கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லப்படும் 1ம் பிரதிவாதிக்கு பாகப் பாத்திய உரிமை உள்ளது என தனியாக பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் பெறும் வரை வழக்கிடைச் சொத்துக்கள் வாதிகளின் அனுபவத்திற்கு எவ்வகையிலும் இடையூறு செய்ய சட்டப்படி அருகதை இல்லை என்றால் சரியல்ல. வழக்கிடை சொத்தில் 1ம் பிரதிவாதிக்கு பாகப் பாத்திய உரிமை இல்லாதபோது, அவரிடமிருந்து கிரையம் பெற்றதாக சொல்லப்படும் எனக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எனக்கு எதிர்வாதம் செய்வதற்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.